# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,187—1962 ජූනි 29 වැනි සිකුරාදා—1962.6.29

13,187 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு யூன் மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின நானாவித அறிவித்தல்கள் | 402 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 395 | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

L.D.—B.80/44

### சம்பளச் சபைச் சட்டம்

#### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 20 ம், 23 ம், 24 ம், 25 ம் பிரிவுகளின் பிரகாரம் மெத்தைத்தும்பு, சிலிர்த்ததும்பு ஏற்றுமதித் தொழிற் சம்பளச்சபையால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள், தொழில தேசியமய சேவை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டனவென்று அச்சட்டத்தின் 29 (3) ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் முதலாந்தேதியன்று நடைமுறைக்குவரும்.

வி. சா. ம. த மெல்,
தொழில் தேசியமய சேவை அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஆண்டு யூன் மாதம் 25 ந் தேதி.

#### அட்டவணை

#### I ம் பாகம்

20 (2) (ஆ) ம் பிரிவின்கீழ் கட்டளை

1. விசேட சகாயப்பணம் தொழிலதிபரால் கணிக்கப்பட்டு மாதமொருமுறை வெளியிடப்படவேண்டும்.
2. யாதாயினுமொரு மாதத்தில் சாதாரண வேலைநாளுக்குரிய சகாயப்பணம், அம்மாதத்திற்கு நேரேமுந்திய மாதத்தின் வாழ்க்கைச் செலவுப்புள்ளியை அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்படவேண்டும்.

சாதாரண வேலைநாள் என்பதன் சொற்பொருள் விளக்கம் (24 ம் பிரிவு)

(ஒருநேரச் சாப்பாட்டுக்கு ஒரு மணிநேரம் உட்பட்ட) ஒரு சாதாரண வேலைநாள் என்பது—

ஒரு சனிக்கிழமையல்லாத நாளெதிலும் 9 மணி நேரத்தையும்,

ஒரு சனிக்கிழமையில் 7 மணி நேரத்தையும்,

கொண்டதாயிருத்தல் வேண்டும்.

### முக்கிய அறிவித்தல்

இத்தாற் சகலரின் கவனத்திற்கும் கொண்டு வருவது யாதெனில், உற்பத்திச் செலவு கூடியதன் காரணமாக இலங்கை அரசாங்க வர்த்தமானியின் விளம்பரக் கட்டணங்களைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தற்போது நடைமுறையிலிருக்கும் முதலாவது அங்குலக் கட்டணம் ரூபா 10 ம் மேலதிக ஒவ்வொரு அங்குலத்திற்கும் ரூபா 5 ம் என்பதற்குப் பதில் ஒரே கட்டணமாக ஒற்றைப்பந்தி அங்குலத்திற்கோ அன்றி அதன் பகுதிக்கோ ரூபா 10, வியாபாரச் சின்னங்கள் தவிர்ந்த ஏனைய விளம்பரங்களுக்கு 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதி தொடக்கம் அறவிடப்படும்.

பேர்னட் டி சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1962 ம் ஆடு யூன் மீ 29 ந் உ.

## II ம் பாகம்

மெத்தைத்தும்பு, சிலிர்த்ததும்பு, ஏற்றுமதித்தொழிலின் நடவடிக்கைகளிற் சில செய்கைமுறைகளுக்கு இயைபுடைய துண்டுவேலைக்குரிய கீழெல்லைச்சம்பள வீதங்கள் பின்வருமாறு :—

| செய்கைமுறை | வீதம் | ரூ. ச. |
|---|---|---|
| சிலிர்த்ததும்பை முழுவதையும் அல்லது பகுதியைக் கையாற்சிக்குவாங்குதலும் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்கு படுத்துதலும்) “ 3 கட்டு ரகம்கொண்ட ” தரப்புரிகளாகக் கட்டுதலும் .. .. .. | அந்தர் ஒன்றுக்கு | 8 75 |
| சிலிர்த்ததும்பை முழுவதையும் அல்லது பகுதியைக் கையாற்சிக்குவாங்குதலும் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்கு படுத்துதலும்) “ 2 கட்டு ரகம்கொண்ட ” தரப்புரிகளாகக் கட்டுதலும் .. .. .. | அந்தர் ஒன்றுக்கு | 8 25 |
| சாயமூட்டுதற்குத் தயார்செய்யும்பொருட்டு புரிகளாகக்கட்டாது முழுவதையும் அல்லது பகுதியைக் கையாற்சிக்குவாங்குதல் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்குபடுத்துதல்) .. .. .. .. | அந்தர் ஒன்றுக்கு | 4 12 |
| சாயமூட்டிய சிலிர்த்ததும்பை முழுவதையும் அல்லது பகுதியைக் கையாற்சிக்குவாங்குதலும் புரிகளாகக் கட்டுதலும் .. | அந்தர் ஒன்றுக்கு | 9 25 |

## III ம் பாகம்

நேரவேலைக்குரிய கீழெல்லைச்சம்பள வீதங்கள் கீழே குறிக்கப்பட்டவாறு :—

(1) ஒரு மூலவீதத்தையும் ;

(2) ஒரு விசேட சகாய்ப்பணத்தையும் கொண்டதாயுமிருத்தல் வேண்டும்.

| 1 | 2 | 3 | | |
|---|---|---|---|---|
| தொழிலாளர் வகுப்பு | சாதாரண வேலை நாட்குரிய மூலவீதம் | யாதாயினுமொரு மாதத்தில் சாதாரண வேலைநாளுக்குரிய விசேட சகாயப்பணவீதம் | | |
| | | (அ) | (ஆ) | (இ) |
| | | முந்திய மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100·1 ஆகவிருக்குமிடத்து விசேட சகாயப் பணம் | முந்திய மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100·0 ஆகவிருக்குமிடத்து விசேட சகாயப் பணம் | முந்திய மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100·1க்குக கூடுதலாக அல்லது 100·0க்குக் குறைவாகவிருக்குமிடத்து 100·1க்குக் கூடுதலாக அல்லது 100·0க்குக் குறைவாகவிருக்கும் ஒவ்வொரு பூரண 1·8 புள்ளிகளுக்கும் (1·8 புள்ளிகளுக்குட்படின் கவனிக்கப்படமாட்டா) கீழே முறைப்படி Iம், IIம் சூசிகளிற் காட்டப்பட்டவாறு பின்னால் வரும் விகிதங்களின் பிரகாரம் கணிக்கப்படும். ஒரு தொகையால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு முற்போந்த 3 (அ) ம் பந்தியிற் கூறப்பட்ட விசேட சகாயப்பண விகிதம் அதிகரிக்கப்படும் அல்லது முற்போந்த 3 (ஆ) ம் பந்தியிற் கூறப்பட்ட விசேட சகாயப்பண விகிதம் குறைக்கப்படும் |

| 1 | 2 | 3 | | |
|---|---|---|---|---|
| தொழிலாளர் வகுப்பு | சாதாரண வேலைநாட்குரிய மூலவீதம் | யாதாயினுமொரு மாதத்தில் சாதாரண வேலைநாளுக்குரிய விசேட சகாயப்பணவீதம் | | |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| ஆண் வேலையாளர் (18 வயதுக்குப்படாதோர்) | | | | |
| (அ) II ம் இனம்— | | | | |
| பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள வேலையாளர்—தும்பை லொறிகளிலிருந்து அல்லது வண்டிகளிலிருந்து பண்டகசாலையில் ஏற்றுக்கொள்ளுதல் (மெத்தைத்தும்பு) சுமைகளையும், (சிலிர்த்ததும்பு) கட்டுகளையும் கணக்கிடல் ; சுமைகளையும், கட்டுகளையும் நிறுத்தல் ; தும்பைத் தரம்பிரித்தல் ; சுமைகளையும் கட்டுகளையும் குவித்தல் ; சுமைக் குவியல்களையும் கட்டுக்குவியல்களையும் குலைத்தல் ; சுமைகளையும் கட்டுகளையும் அவிழ்த்தல் ; தேவையற்ற பொருள்களை அகற்றலும் தும்பைச்சுத்தஞ் | | | | |

| 1 | 2 | 3 | | |
|---|---|---|---|---|
| தொழிலாளர் வகுப்பு | சாதாரண வேலைநாட் குரிய மூலவீதம் | யாதாயினுமொரு மாதத்தில் சாதாரண வேலைநாளுக்குரிய விசேட சகாயப்பணவீதம் | | |
| | | (அ) முந்திய மாதத்திற் குரிய வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100·1 ஆகவிருக்குமிடத்து விசேட சகாயப் பணம் | (ஆ) முந்திய மாதத்திற் குரிய வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100·0 ஆகவிருக்குமிடத்து விசேட சகாயப் பணம் | (இ) முந்திய மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100·1க்குக் கூடுதலாக அல்லது 100·0க்குக் குறைவாகவிருக்குமிடத்து 100·1க்குக் கூடுதலாக அல்லது 100·0க்குக் குறைவாகவிருக்கும் ஒவ்வொரு பூரண 1·8 புள்ளிகளுக்கும் (1.8 புள்ளிகளுக்குட்படின் கவனிக்கப்படமாட்டா) கீழே முறைப்படி I ம், II ம் சூசிகளிற் காட்டப்பட்டவாறுபின்னுல் வரும் விகிதங்களின் பிரகாரம் கணிக்கப்படும். ஒரு தொகையால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு முற்போந்த 3 (அ) ம் பந்தியிற் கூறப்பட்ட விசேட சகாயப்பண விகிதம் அதிகரிக்கப்படும் அல்லது முற்போந்த 3 (ஆ) ம் பந்தியிற் கூறப்பட்ட விசேட சகாயப்பண விகிதம் குறைக்கப்படும். |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| செய்தலும் ; குலைந்த தும்பைக் கட்டாக்குதல் ; குலைந்த தும்பைக் காயவைத்தல் ; சுமைகளையும் கட்டுகளையும் பண்டகசாலையின் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்துக்கு எடுத்துச்செல்லல்; வெட்டிய சிலிர்த்த தும்புப்புரிகளைச் சீர்ப்படுத்துதல் ; தும்பை முறுக்குதலும் சுமைகளாக்குதலும் ; திரித்த தும்பைச் சுற்றுதல் ; சாயமூட்டுதற்கு விறகு வெட்டுதல் ; சிக்குவாங்குதற்கு எண்ணெய் விநியோகித்தல் ; கட்டிய சிலிர்த்த தும்புக்கட்டுகளை வெட்டுதல் ; பண்டகசாலையையும் கான்களையும் பெருக்குதல் ; கயிற்றுத் தூசியையும் குப்பையையும் வண்டியில் அகற்றுதல் ; அகற்றுதற்காகக் கயிற்றுத் தூசியையும் குப்பையையும் வாகனங்களில் இடுதல் ; கயிற்றுத்தூசியை அரித்தல் ; கயிற்றுத் தூசியையும் குப்பையையும் பைகளில் இடுதல்; தேனீர் தயாரித்தல் ; உணவும் தேனீரும் வழங்குதல் ; தும்பை (பெட்டிகளில்) அடைத்தலிலும் பதப்படுத்தலிலும் உபயோகிக்கப்படும் சில்லறைப் பொருள்களை ஏற்றுக்கொள்ளல் ; கணக்கிடல், நிறுத்தல், குவித்தல், அகற்றல், வெட்டுதல், தயாரித்தல் ; சுமைகளையும் கட்டுகளையும் பண்டகசாலையிலிருந்து, நிறம்நீக்கு சாலையிலிருந்து அல்லது காயவைக்குமிடத்திலிருந்து அமுக்கிக்கு எடுத்துச்செல்லுதல் ; அமுக்கிப் பெட்டியில் அடைப்போருக்குத் தும்பைச் சேர்ப்பித்தல் ; தும்பு அமுக்கிய பெட்டிகளைத் தள்ளுதற்குத் தள்ளுபொறிகளை இயக்குதல் ; மூங்கில்களை அரிதலும் பிளத்தலும் ; இரும்புவளையம் வெட்டுதல் ; தும்புக் கயிறுகளை நீட்டுதல் ; அமுக்கி, மேடை, குழி, சுற்றுப்புறம் ஆகியவற்றைப் பெருக்குதலும். | | | | |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| சுத்தஞ்செய்தலும் சிப்பங்களைச் சாக்கால் மூடித் தைத்தல், சுமைகளைக் காகிதத்தால் அல்லது சாக்கால் சுற்றுதல் ; மூடைகள் யாவையும் கப்பலில் ஏற்றியனுப்புவதற்காக அடையாளமிடுதல் .. | 1 40 | 2 0 .. | 1 97 .. | 0 3 |

| 1 | 2 | 3 | | |
|---|---|---|---|---|
| தொழிலாளர் வகுப்பு | சாதாரண வேலைநாளுக் குரிய மூலவீதம் | யாதாயினுமொரு மாதத்தில் சாதாரண வேலைநாளுக்குரிய விசேட சகாயப்பணவீதம் | | |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| (ஆ) நடுத்தர இனம்— பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள வேலையாளர்— தும்பைத் தரைமட்டத்திலிருந்து அமுக்கும் மேடைக்கு (உயர்ந்த மட்டத்திலிருப்பின்) எறிதல்; சுத்தஞ்செய்யும் இயந்திரங்களுக்குத் தும்பூட்டுதல் ; சுமைகளாக்கும் பெட்டிகளில் தும்பையிட்டுச் சுமைகளாக்குதல் ; கயிற்றுப்புரியிலிருந்து கயிறு திரித்தல் ; கெந்தகத்தால் தும்பை நிறம் நீக்கும் செய்முறை ; சுத்தஞ் செய்த சிலிர்த்த தும்புப் பிடிகளைக் குறிப்பிட்ட நீளத்திற்கு வெட்டுதலும் தும்புக்குச் சாயமூட்டும் செய்முறையும் .. | 1 60 .. | 2 10 .. | 2 7 .. | 0 3 |
| (இ) I ம் இனம்— பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள வேலையாளர்— அமுக்கும் இயந்திரத்தால் அல்லது அமுக்கும் இயந்திரமின்றித் தும்பைப் பெட்டிகளில் அடைத்துச் சிப்பங்களாக்குதல் ; அமுக்கியை கட்டுப்படுத்தலும், இயக்குதலும் ; சிப்பத்தை இரும்பு வளையத்தால் அல்லது கயிற்றால் கட்டுதல் ; சிப்பங்களைக் குவித்தல் ; குலைத்தல், எடுத்துச்செல்லுதல், தள்ளுதல், ஏற்றுதல், இறக்குதல், ; தும்பைத் திரித்தலும் முறுக்குதலும் .. | 1 80 .. | 2 10 .. | 2 7 .. | 0 3 |
| (ஈ) தலைமை அமுக்கி இயக்குநர் .. | 2 0 .. | 2 10 .. | 2 7 .. | 0 3 |
| ஆ. பெண் வேலையாளர் (18 வயதுக்குட்படாதோர்) .. | 1 15 .. | 1 88 .. | 1 85 .. | 0 3 |
| இ. 18 வயதுக்குட்பட்ட வேலையாளர் (இருபாலாரும்)— | | | | |
| 14 வயதுக்குமேற்பட ஆனால் 15 வயதுக்குட்பட .. | 0 80 .. | 1 51 .. | 1 49 .. | 0 2 |
| 15 வயதுக்குமேற்பட ஆனால் 16 வயதுக்குட்பட .. | 0 90 .. | 1 56 .. | 1 54 .. | 0 2 |
| 16 வயதுக்குமேற்பட ஆனால் 17 வயதுக்குட்பட .. | 1 0 .. | 1 61 .. | 1 59 .. | 0 2 |
| 17 வயதுக்குமேற்பட ஆனால் 18 வயதுக்குட்பட .. | 1 15 .. | 1 71 .. | 1 69 .. | 0 2 |

மேலே 3 (இ) ம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள கட்டளைகளை இயைபுபடுத்துவதைக் காட்டும் சூசிகள்

### I ம் சூசி

வாழ்க்கைச் செலவுப்புள்ளி அதிகரிப்பின் கொடுபடவேண்டிய விசேட சகாயப்பணம்

| | 18 வயதுக்குட்படாத ஆண் வேலையாளர் | | 18 வயதுக்குட் படாத பெண் வேலையாளர் | 18 வயதுக்குட்பட்ட வேலையாளர் (எப்பாலாராயினும்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செலவுப்புள்ளிகள் | II ம் இனம் | நடுத்தர இனம் 1 ம் இனம், தலைமைச் சிப்பம் அமுக்கி | | 14 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 15 வயதுக்குட்பட | 15 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 16 வயதுக்குட்பட | 16 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 17 வயதுக்குட்பட | 17 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 18 வயதுக்குட்பட |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 100·1—101·8 .. | 2 0 .. | 2 10 .. | 1 88 .. | 1 51 .. | 1 56 .. | 1 61 .. | 1 71 |
| 101·9—103·6 .. | 2 3 .. | 2 13 .. | 1 91 .. | 1 53 .. | 1 58 .. | 1 63 .. | 1 73 |
| 103·7—105·4 .. | 2 6 .. | 2 16 .. | 1 94 .. | 1 55 .. | 1 60 .. | 1 65 .. | 1 75 |
| 105·5—107·2 .. | 2 9 .. | 2 19 .. | 1 97 .. | 1 57 .. | 1 62 .. | 1 67 .. | 1 77 |
| 107·3—109·0 .. | 2 12 .. | 2 22 .. | 2 0 .. | 1 59 .. | 1 64 .. | 1 69 .. | 1 79 |

### II ம் சூசி

வாழ்க்கைச் செலவுப்புள்ளி குறையின் கொடுபடவேண்டிய விசேட சகாயப்பணம்

| | 18 வயதுக்குட்படாத ஆண் வேலையாளர் | | 18 வயதுக்குட் படாத பெண் வேலையாளர் | 18 வயதுக்குட்பட்ட வேலையாளர் (எப்பாலாராயினும்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செலவுப்புள்ளிகள் | II ம் தரம் | நடுத்தர இனம் 1 ம் இனம், தலைமைச் சிப்பம் அமுக்கி | | 14 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 15 வயதுக்குட்பட | 15 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 16 வயதுக்குட்பட | 16 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 17 வயதுக்குட்பட | 17 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 18 வயதுக்குட்பட |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 100·0— 98·3 .. | 1 97 .. | 2 7 .. | 1 85 .. | 1 49 .. | 1 54 .. | 1 59 .. | 1 69 |
| 98·2— 96·5 .. | 1 94 .. | 2 4 .. | 1 82 .. | 1 47 .. | 1 52 .. | 1 57 | 1 67 |
| 96·4— 94·7 .. | 1 91 .. | 2 1 .. | 1 79 .. | 1 45 .. | 1 50 .. | 1 55 .. | 1 65 |
| 94·6— 92·9 .. | 1 88 .. | 1 98 .. | 1 76 .. | 1 43 .. | 1 48 .. | 1 53 .. | 1 63 |
| 92·8— 91·1 .. | 1 85 .. | 1 95 .. | 1 73 .. | 1 41 .. | 1 46 .. | 1 51 .. | 1 61 |

## IV ம் பாகம்

### மேலதிக நேரவீதம்

சாதாரண வேலைநாளுக்கு மேலதிகமாகச் செய்யும் ஒவ்வொரு மணிநேர வேலைக்குமுரிய கீழெல்லை மேலதிகநேரவீதம் (கீழெல்லை நாளாந்தர வீதத்தை 8 ஆற் பிரிக்கவரும்) கீழெல்லைமணித்தியால வீதத்தை நூற்றுக்கு 50 வீதம் அதிகரிக்கவரும் தொகையாகும்.

## V ம் பாகம்

### வாராந்தர விடுமுறைநாள் (24 ம் பிரிவு)

ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் வேலைபார்க்கும் வேலையாளர் யாவருக்கும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையையும் வாராந்தர விடுமுறை நாளாகக் கொடுத்தல் வேண்டும்.

ஆயினும், ஒரு முதலாளி பின்வரும் நிபந்தனைகளுக்கமைய ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று எவ்வேலையாளருக்கும் வேலைகொடுக்கலாம்—

(1) அத்தகைய ஞாயிற்றுக்கிழமைக்கு நேரடுத்துவரும் ஆறுநாட்களுள் ஒருநாள் அவ்வேலையாளருக்கு ஒரு விடுமுறைநாளாகக் கொடுக்கப்படுதல் வேண்டும் ;

(2) ஒரு ஞாயிற்றுக்கிழமையிற் செய்யும் வேலைசம்பந்தமாக அவ்வேலையாளருக்கு ஒரு சாதாரண வேலைநாளுக்குரிய கீழெல்லைச் சம்பளவீதத்தில் ஒன்றரைமடங்கு வேதனமாகக் கொடுக்கப்படுதல் வேண்டும் ;

(3) எவ்வேலையாளராயினும் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் (சாப்பாட்டிற்கு ஒரு மணிநேரமுட்பட்ட) மூன்பது மணிநேரத்திற்கு மேற்பட வேலைகொடுக்கப்படலாகாது.

எக்காலத்துள்ளும் வாராந்தர விடுமுறைநாளன்று செய்யும் வேலைக்கு ஒரு வேலையாளருக்குரிய வேதனம் அக்காலத்திற்குரிய சம்பளத்துடன் சேர்த்துக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

## VI ம் பாகம்

### ஆண்டு விடுமுறைகள் (25 ம் பிரிவு)

1. (அ) 18 வயதுக்குட்படாத ஆண் வேலையாளரொருவர் எவ்வாண்டிலாயினும் ஒரே முதலாளியின்கீழ் 228 நாட்களுக்குமேற்பட வேலை செய்திருப்பின், 228 நாட்களுக்கு மேற்பட அவர் வேலைசெய்த ஒவ்வொரு பூரண நான்கு நாட்களுக்கும் ஒரு விடுமுறைநாள் வீதம் கணக்கிடப்பட்டு, குறித்த வேலையாளருக்கு விடுமுறைநாள் அல்லது விடுமுறைநாட்கள் நேரடுத்துவரும் ஆண்டிற் கொடுக்கப்படுதல் வேண்டும் ;

ஆயினும், 284 நாட்களுக்கு மேற்படவுள்ள எவ்வேலைக்காலத்திற்கும் அத்தகைய விடுமுறைநாளெதையும் முதலாளியொருவர் கொடுக்கக் கடமைப்பட்டவரன்று.

(ஆ) பெண் வேலையாளரொருவர் அல்லது 18 வயதுக்குட்பட்ட வேலையாளரொருவர் (எப்பாலராயினும்) எவ்வாண்டிலாயினும் ஒரே முதலாளியின்கீழ் 204 நாட்களுக்கு மேற்பட வேலைசெய்திருப்பின், 204 நாட்களுக்கு மேற்பட வேலை செய்த ஒவ்வொரு பூரண நான்கு நாட்களுக்கும் ஒரு விடுமுறைநாள் வீதம் கணக்கிடப்பட்டு, குறித்த வேலையாளருக்கு விடுமுறைநாள் அல்லது விடுமுறைநாட்கள் நேரடுத்துவரும் ஆண்டிற் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஆயினும், 260 நாட்களுக்கு மேற்படவுள்ள எவ்வேலைக்காலத்திற்கும் அத்தகைய விடுமுறைநாளெதையும் முதலாளியொருவர் கொடுக்கக் கடமைப்பட்டவரன்று.

(இ) 18 வயதுக்குட்படாத ஆண்வேலையாளரொருவர் எவ்வாண்டிலாயினும் ஒரே முதலாளிக்கு 9,576 இருத்தலுக்கு மேற்பட்ட சிலிர்த்த தும்பைச் சிக்குவாங்கிக் கட்டியிருப்பின், 9,576 இருத்தலுக்கு மேற்பட அவ்வேலையாளர் சிக்குவாங்கிக் கட்டிய ஒவ்வொரு 180 இருத்தலுக்கும் ஒரு விடுமுறைநாள் வீதம் கணக்கிடப்பட்டு, குறித்த வேலையாளருக்கு விடுமுறைநாள் அல்லது விடுமுறைநாட்கள் நேரடுத்துவரும் ஆண்டிற் கொடுக்கப்படுதல் வேண்டும் ;

ஆயினும், 12,096 இருத்தலுக்கு மேற்படச் சிக்குவாங்கிக் கட்டிய எந்த அளவு சிலிர்த்த தும்புக்கும், அத்தகைய விடுமுறைநாளெதையும் முதலாளியொருவர் கொடுக்கக் கடமைப்பட்டவரன்று.

(ஈ) பெண் வேலையாளரொருவர் அல்லது 18 வயதுக்குட்பட்ட வேலையாளரொருவர் (எப்பாலராயினும்) எவ்வாண்டிலாயினும் ஒரே முதலாளிக்கு 8,568 இருத்தலுக்கு மேற்பட்ட சிலிர்த்ததும்பைச் சிக்குவாங்கிக் கட்டியிருப்பின், 8,568 இருத்தலுக்கு மேற்பட அவ்வேலையாளர் சிக்குவாங்கிக்கட்டிய ஒவ்வொரு 180 இருத்தலுக்கும் ஒரு விடுமுறைநாள் வீதம் கணக்கிடப்பட்டு, குறித்த வேலையாளருக்கு விடுமுறைநாள் அல்லது விடுமுறைநாட்கள் நேரடுத்துவரும் ஆண்டிற் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஆயினும், 11,088 இருத்தலுக்கு மேற்படச் சிக்குவாங்கிக்கட்டிய எந்த அளவு சிலிர்த்ததும்புக்கும், அத்தகைய விடுமுறையெதையும் முதலாளியொருவர் கொடுக்கக்கடமைப்பட்டவரன்று.

2. 1 ம் பந்தியின் அ—ம், ஆ—ம் உபபந்திகளின் நோக்கத்திற்காக, " வேலையாளர் வேலைசெய்த நாட்கள் " என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும் :—

(அ) கவனிக்கப்படும் எவ்வாண்டிலும், (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 25 ம் பிரிவின் பிரகாரம் அவ்வேலையாளருக்கு முதலாளி கொடுத்த விடுமுறை நாளொவ்வொன்றும் ;

(ஆ) முதலாளி அனுமதிக்கும் எக்காரணத்தின் பேரிலும் வேலைக்கு வராத நாள் ஒவ்வொன்றும் ;

(இ) தமது வேலை காரணமாகவும், தாம் வேலைசெய்துகொண்டிருக்கும் பொழுது ஏற்படும் ஒரு விபத்தின் காரணமாகவும் அவ் வேலையாளருக்கு நேரும் காயத்தின்பொருட்டு வேலைக்கு வராதநாள் ஒவ்வொன்றும் ;

(ஈ) (139 ம் அத்தியாயமாகிய) தொழிலாளர் நட்டஈட்டுச் சட்டத்தின் III ம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட தொழிலின்பயனாக ஏற்படும் யாதாயினுமொரு நோய் காரணமாக வேலைக்கு வராதநாள் ஒவ்வொன்றும் ;

(உ) முதலாளி வேலையாளருக்கு வேலை கொடுக்கத்தவறும் நாள் ஒவ்வொன்றும் ;

(ஊ) எவ்வாண்டிலாயினும் மொத்த 30 நாட்களுக்கு மேற்படாத சட்டவிரோதமற்றதல்லாத வேலைநிறுத்தம் அல்லது கதவடைப்புக் காரணமாக வேலைக்கு வராத நாளொவ்வொன்றும் ;

(எ) சம்பளச்சபைச்சட்டம் அல்லாத எழுத்திலுள்ள மற்றும் எச்சட்டத்தின் ஏற்பாடுகளாலும் அல்லது அவ்வேற்பாடுகளின்படியும் ஒரு வேலையாளருக்கு உரித்தான விடுமுறைநாள் ஒவ்வொன்றும் அல்லது வேலைக்கு வராதிருக்க உரித்தான விடுமுறைநாள் ஒவ்வொன்றும், ஆனால், சம்பளச்சபைச் சட்டத்தின் 24 ம் பிரிவின் பிரகாரம் வாராந்தர விடுமுறைநாளாக நிர்ணயிக்கப்பட்ட நாளை உட்படுத்தாது.

3. 1 ல் பந்தியின் இ—ம், ஈ—ம் உபபந்திகளின் நோக்கங்களுக்காக, வேலையாளரொருவர் பின்வரும் நாட்களில் 42 இருத்தல் சிலிர்த்த தும்பைச் சிக்குவாங்கிக் கட்டியவராகக் கருதப்படுதல் வேண்டும் :—

(அ) கவனிக்கப்படும் எவ்வாண்டிலும் (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 25 ம் பிரிவின் பிரகாரம் அவ்வேலையாளருக்கு முதலாளி கொடுத்த விடுமுறைநாள் ஒவ்வொன்றும் ;

(ஆ) முதலாளி அனுமதித்த எக்காரணத்தின்பேரிலும் வேலையாளர் வேலைக்கு வராத நாளொவ்வொன்றும் ;

(இ) தமது வேலைகாரணமாகவும், தாம் வேலை செய்துகொண்டிருக்கும் பொழுது நேர்ந்த யாதாயினுமொரு விபத்தின் காரணமாகவும் வேலையாளருக்கு ஏற்பட்ட காயத்தின்பொருட்டு அவ்வேலையாளர் வேலைக்குவராத நாளொவ்வொன்றும்

(ஈ) (139 ம் அத்தியாயமாகிய) தொழிலாளர் நட்டஈட்டுச் சட்டத்தின் III ம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட தொழிலின்பயனாக ஏற்பட்ட யாதாயினுமொரு நோய்காரணமாக வேலையாளர் வேலைக்குவராத நாளொவ்வொன்றும் ;

(உ) வேலையாளர் 42 இருத்தல் சிலிர்த்ததும்பைச் சிக்குவாங்கிக் கட்டுதற்குப்போதிய மூலப்பொருள்களை முதலாளி கொடுக்கமுடியாத அல்லது கொடுக்கத்தவறும் நாளொவ்வொன்றும் ;

(ஊ) எவ்வாண்டிலாயினும் மொத்தம் 30 நாட்களுக்கு மேற்படாத சட்டவிரோதமற்றதல்லாத வேலைநிறுத்தம் அல்லது கதவடைப்பு காரணமாக வேலைக்குவராத நாளொவ்வொன்றும் ;

(எ) சம்பளச்சபைச் சட்டம் அல்லாத எழுத்திலுள்ள மற்றும் எச்சட்டத்தின் ஏற்பாடுகளாலும் அல்லது அவ்வேற்பாடுகளின்படியும் ஒரு வேலையாளருக்கு உரித்தான விடுமுறைநாள் ஒவ்வொன்றும் அல்லது வேலைக்குவராதிருக்க உரித்தான விடுமுறைநாள் ஒவ்வொன்றும் ; ஆனால் (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 24 ம் பிரிவின் பிரகாரம் வாராந்தர விடுமுறை நாளாக நிர்ணயிக்கப்பட்ட நாளை உட்படுத்தாது.

4. ஒரு வேலையாளரும் அவரது முதலாளியும் பரஸ்பரம் சம்மதித்துக்கொண்ட நாளில் அல்லது நாட்களில் அவ்வேலையாளருக்கு விடுமுறை நாள் அல்லது விடுமுறைநாட்கள் கொடுக்கப்படவேண்டும்.

5. விடுமுறை நாளொவ்வொன்றுக்கும் கொடுக்கப்படவேண்டிய வேதனம் தகுதிப்படுத்தும் ஆண்டின் கடைசி ஆறுமாதங்களில் வேலையாளர் உண்மையாக வேலைசெய்த நாட்களுக்கு அவர் சம்பாதித்த (மேலதிக நேரச்சம்பளம் நீங்கலான) மொத்தச் சம்பளத்தை அத்தகைய நாட்களின் தொகையால் பிரிக்கவரும் சராசரி நாட்சம்பளமாகும்.

6. விடுமுறைநாளுக்கு அல்லது விடுமுறைநாட்களுக்கு உரிய வேதனம் அத்தகைய விடுமுறைநாள் அல்லது விடுமுறைநாட்கள் ஆரம்பிக்கு முன்னர் கொடுக்கப்படுதல் வேண்டும்.

7. ஒரு வேலையாளர் யாதாயினுமொரு தேதியில் தமது வேலையிலிருந்து தாமாக விலக உத்தேசிப்பின் அல்லது வேலையிலிருந்து நிறுத்தப்படவோ, நீக்கப்படவோ இருப்பின், அத்தேதிக்கு முன்னர்—

(அ) கடைசியாக முடிவடைந்த ஆண்டில் அவருக்குரித்துள்ளதும் அவர் ஏற்கெனவே எடுக்காததுமான ஒவ்வொரு விடுமுறைநாளையும் எடுக்க அவருக்குரித்துண்டு, அன்றியும் அவர் எடுத்தாகவேண்டும் ;

(ஆ) 1 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட வேலைக்கமர்த்தலும் வேலையும் தொடர்பாய ஏற்பாடுகளுக்சமைந்து அவ்வேலையாளர் நடைபெறும் ஆண்டில் ஒழுகியிருப்பின், அவரது வேலை தீர்ந்தாலன்றி, நேரடுத்துவரும் ஆண்டில் அவருக்குரித்துள்ள ஒவ்வொரு விடுமுறை நாளையும் எடுக்க அவருக்குரித்துண்டு, அன்றியும் அவர் எடுத்தாகவேண்டும் ;

அவருக்கு அத்தகைய, விடுமுறைநாட்களுக்கு, இத்தீர்மானங்களின் 5 ம் ஏற்பாடுகளின் பிரகாரம் வேதனம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

8. முற்போந்த தீர்மானங்கள் 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் தேதிக்கு முந்திய எக்காலத்து வேலைக்கும் பொருத்தமுடையனவாகா.

6—1346.

---

## கடை, காரியாலய ஊழியர் (வேலையையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தும்) சட்டம்

### 40 ம் பிரிவின் கீழ் மூடும் கட்டளை

கடை, காரியாலய ஊழியர் (வேலையையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தும்) சட்டத்தின் (129 ம் அத்தியாயம்) 40-ம் பிரிவின் பிரகாரம், தொழில், தேசியமய சேவை அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அவரால் ஆக்கப்பட்டு, செனேற் சபையாலும், பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட கட்டளை.

மை. போ. டி சொ. சிறிவாதன,
தொழில், தேசியமய சேவை அமைச்சர்,

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூன் மாதம் 18 ந் தேதி.

### கட்டளை

1938 ம் ஆண்டின் 66 ம் இலக்க சாய்ப்புச் சட்டத்தின் 15 ம் பிரிவின் பிரகாரம் பிறப்பிக்கப்பட்டு, 1953 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 10 ந் தேதி வெளிவந்த 10,517 ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமான மூடுங்கட்டளை இத்தால் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகிறது :—

(1) 1 ம் பந்தியில், " முதலாவது, இரண்டாவது, மூன்றாவது அட்டவணைகளிற் குறிக்கப்பட்ட பகுதிகளுக்குட்பட்ட " என்னும் சொற்களுக்குப் பதிலாக " எவ்வட்டவணையிலும் குறிக்கப்பட்ட எப்பகுதிக்குமுட்பட்ட " என்னும் சொற்களை இடுதலாலும் ;

(2) 2 ம் பந்தியில்—

(அ) " மயிர் களைதல், சீர்ப்படுத்துதல், முதலியவற்றில் ஈடுபடும் சாலையும் நாவிதர் சாய்ப்பும் " என்னும் சொற்கள் அப்பந்தியில் தோன்றுகே வருமிடங்களில் அவற்றிற்குப் பதிலாக, " மயிர் சீர்ப்படுத்தற்சாலை, நாவிதர் சாய்ப்பு, சலவைச் சாலை, உலர் சலவைச்சாலை, சாயமூட்டுஞ் சாலை " என்னும் சொற்களை இடுதலாலும் ;

(ஆ) அதன் (3) ம் உபபந்திக்கு நேரடுத்துப்பின்னர் பின்வரும் புதிய உபபந்தியை இடுதலாலும் :—

" (4) (i) இக்கட்டளையின் 4 ம், 5 ம் பந்திகளில் வேறுவகையில் வெளிப்படையாக விதிக்கப்பட்டிருந்தாலன்றி, இதனகத்தேயுள்ள நான்காவது அட்டவணையிற் குறிக்கப்பட்ட எப்பகுதியிலுமுள்ள மயிர் சீர்ப்படுத்தற்சாலை, நாவிதர் சாய்ப்பு, சலவைச்சாலை, உலர் சலவைச்சாலை, சாயமூட்டுஞ் சாலை ஆகியன தவிர்ந்த ஒவ்வொரு கடையும் (3 ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைந்த கடை எதுவும் நீங்கலாக)—

(அ) வாரந்தோறும் வெள்ளிக்கிழமையல்லாத ஒவ்வொரு நாளிலும் காலை 9 மணிவரையும் ;

(ஆ) வாரந்தோறும் வியாழக்கிழமையில் பி. ப. 2 மணிக்கும் அதன்பின்னரும் ;

(இ) வாரந்தோறும் ஞாயிறு, செவ்வாய், சனிக்கிழமைகளில் பி. ப. 6 மணிக்கும் அதன்பின்னரும் ;

(ஈ) வாரந்தோறும் திங்கள், புதன்கிழமைகளில் பி. ப. 7 மணிக்கும் அதன்பின்னரும் ;

(உ) வாரந்தோறும் வெள்ளிக்கிழமை முழுநாளும் வாடிக்கைக்காரருக்குச் சேவை புரியாவண்ணம் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) இதனகத்தேயுள்ள நான்காவது அட்டவணையிற் குறிக்கப்பட்ட பகுதியிலுள்ள மயிர் சீர்ப்படுத்தற்சாலை, நாவிதர் சாய்ப்பு, சலவைச்சாலை, உலர் சலவைச்சாலை, சாயமூட்டுஞ் சாலை ஒவ்வொன்றும்—

(அ) வாரந்தோறும் வெள்ளிக்கிழமையல்லாத ஒவ்வொரு நாளிலும் காலை 7 மணிவரையும் ;

(ஆ) வாரந்தோறும் வியாழக்கிழமையில் பி. ப. 5 மணிக்கும் அதன்பின்னரும் ;

(இ) வாரந்தோறும் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், சனிக்கிழமைகளில் பி.ப. 7 மணிக்கும் அதன்பின்னரும்;

(ஈ) வாரந்தோறும் வெள்ளிக்கிழமை முழுநாளும் வாடிக்கைகாரருக்குச் சேவை புரியாவண்ணம் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) (i) இக்கட்டளையின் 4 ம், 5 ம் பந்திகளில் வேறுவகையில் வெளிப்படையாக விதிக்கப்பட்டிருந்தாலன்றி, இதனகத்தேயுள்ள ஐந்தாவது அட்டவணையிற் குறிக்கப்பட்ட எப்பகுதியிலுமுள்ள மயிர் சீர்ப்படுத்தற்சாலை, நாவிதர் சாய்ப்பு, சலவைச்சாலை, உலர் சலவைச்சாலை, சாயமூட்டுஞ்சாலை ஆகியன தவிர்ந்த ஒவ்வொரு கடையும் (3 ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைந்த கடை எதுவும் நீங்கலாக)—

(அ) வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் ;

(ஆ) வாரந்தோறும் சனிக்கிழமையில் பி. ப. 2 மணிக்கும் அதன்பின்னரும் ;

(இ) வாரந்தோறும் திங்கள், செவ்வாய், வியாழக்கிழமைகளில் பி. ப. 7 மணிக்கும் அதன்பின்னரும் ;

(ஈ) வாரந்தோறும் புதன், வெள்ளிக்கிழமைகளில் பி. ப. 8 மணிக்கும் அதன்பின்னரும் ;

(உ) வாரந்தோறும் சனிக்கிழமையில் காலை 9 மணிவரையும் ;

(ஊ) வாரநதோறும் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளிற் காலை 10 மணிவரையும்
வாடிக்கைகாரருக்குச் சேவை புரியாவண்ணம் மூடப்பட்டிருத் தல்வேண்டும்.

(ii) இதனகத்தேயுள்ள ஐந்தாவது அட்டவணையிற் குறிக்கப்பட்ட பகுதிகளுள் எப்பகுதியிலுமுள்ள மயிர்சீர்ப்படுத்தற்சாலை, நாவிதர் சாய்ப்பு, சலவைச்சாலை, உலர் சலவைச்சாலை, சாய மூட்டுஞ்சாலை ஒவ்வொன்றும்—

(அ) வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமையல்லாத ஒவ்வொரு நாளிலும் காலை 7 மணிவரையும் ;

(ஆ) வாரந்தோறும் சனிக்கிழமையில் பி. ப. 5 மணிக்கும் அதன்பின்னரும் ;

(இ) வாரந்தோறும் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் பி. ப. 7 மணிக்கும் அதன் பின்னரும் ;

(ஈ) வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை முழுவதும். வாடிக்கைகாரருக்குச் சேவை புரியாவண்ணம் மூடப் பட்டிருத்தல் வேண்டும்.

(3) 3 ம் பந்தியில் " முதலாவது அட்டவணையில் " என்பது தொடக்கம் " மூன்றுவது அட்டவணையிற் குறிக்கப்பட்ட எப்பகுதியிலிருப் பினும்சரி " என்பது வரையுள்ள சொற்கள் யாவுக்கும் பதிலாக " இதனகத்தேயுள்ள எவ்வட்டவணையிலும் குறிக்கப்பட்ட எப் பகுதியிலுமுள்ள " என்னும் சொற்களை இடுதலாலும் ;

(4) 4 ம் பந்தியில்—

(அ) " முதலாவது அட்டவணையில் இரண்டாவது அட்டவணை யில் அல்லது மூன்றுவது அட்டவணையில் " என்னும் சொற்களுக்குப் பதிலாக " எவ்வட்டவணையிலும் " என் னும் சொற்களை இடுதலாலும் ;

(ஆ) அதன் (ஆ) ம் உபபந்தியில் "ஐந்து மணித்தியாலங்கட்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுதலாலும் :—

" மயிர் சீர்ப்படுத்தற்சாலை, நாவிதர் சாய்ப்பு, சலவைச் சாலை, உலர் சலவைச்சாலை அல்லது சாயமூட்டுஞ் சாலை விடயத்தில் பத்து மணித்தியாலத்திற்கும், மற்றும் எக்கடை விடயத்திலும் ஐந்து மணித்தியா லத்திற்கும் " ;

(இ) அதன் (இ) ம் உபபந்தியில் " ஒன்பது மணித்தியாலங் கட்கு " என்னும் சொற்களுக்குப் பதிலாக, பின்வரு வனவற்றை இடுதலாலும் :—

மயிர் சீர்ப்படுத்தற்சாலை, நாவிதர் சாய்ப்பு, சலவைச் சாலை, உலர் சலவைச்சாலை அல்லது சாய மூட்டுஞ்சாலை விடயத்தில் பன்னிரண்டு மணித்தியாலத்திற்கும், மற்றும் எக்கடை விடயத்திலும் அத்தகைய மூன்று நாட்களில் ஒன்பது மணித்தியாலத்திற்கும் அத்த கைய இரண்டு நாட்களிற் பத்து மணித்தியாலத் திற்கும் " ;

(5) 5 ம் பந்தியில். அதன் (2) ம் உபபந்தியின் (இ) ம் சரத்திற்கு நேரடுத்துப்பின்னர் பின்வரும் புதிய சரத்தை இடுதலாலும்: —

" (ஈ) 2 (4) ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைந்துள்ள கடை யெதுவும்—

(i) வாரந்தோறும் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், சனிக்கிழமைகளில் காலை 9 மணிவரை யும் ஆனால் பி. ப. 8 மணிக்குப் பிந்தாமல் ;

(ii) வாரந்தோறும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணிவரையும் ஆனால் பி. ப. 6 மணிக்குப் பிந்தாமல் " ;

வாடிக்கைகாரருக்குச் சேவை புரியும்வண்ணம் திறந்திருக்கலாம்.

(6) அதனகத்தேயுள்ள முதலாவது அட்டவணையில்—

(அ) அதன் (i) ம் பந்தியில் " தெஹிவலை—கல்கிசை " ; என் னும் சொற்களை நீக்குதலாலும் ;

(ஆ) அதன் (2) ம் பந்தியில்—

(i) " கொழும்பு " என்னும் சொல்லுக்குப் பதிலாக, " கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ள வத்தைத் தொகுதிகளின் எல்லைகளுக்குட் பட்ட பகுதிகள் நீங்கலாகக் கொழும்பு " என் னும் சொற்களை இடுதலாலும் ;

(ii) அப்பந்தியின் இறுதியில் " தெஹிவலை—கல்கிசை " என்னும் சொற்களைச் சேர்த்துக் கொள்ளு தலாலும் ;

(7) அதனகத்தேயுள்ள மூன்றுவது அட்டவணையில் அதன் (i) ம் பந்தியில் " கடுக்கண்ணாவை " என்ற சொல்லை நீக்குதலாலும் ;

(8) மூன்றுவது அட்டவணைக்கு நேரடுத்துப்பின்னர் பின்வரும் புதிய அட்டவணையைச் சேர்த்துக் கொள்ளுதலாலும் :—

" நான்காவது அட்டவணை.

கடுகண்ணாவைப் பட்டினசபையின் பரிபாலன எல்லைகளுக்குட்பட்ட பகுதி.

ஐந்தாவது அட்டவணை.

கொழும்பு நகரசபையின் கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ள வத்தைத் தொகுதிகளின் எல்லைகளுக்குட்பட்ட பகுதி ".

6-1113

---

## சம்பளச்சபைச் சட்டம்

### அறிவித்தல்

உறைநீர், வளிநீர் உற்பத்தித் தொழிற் சம்பளச்சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த திரு. எஸ். டீ. றூம் 1962 ம் ஆண்டு மே மாதம் 1 ந் தேதி தொடக்கம் இத்தீவில் இல்லாத காலத்து, அவருக்குப்பதிலாக தற்காலிகமாகக் கடமையாற்ற திரு. பீ. மக்விக்கர் என்பவரை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச்சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசியமய சேவைமந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள் ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வி. சா. ம. த மெல்,
தொழில், தேசியமய சேவை மந்திரி காரி யாலய நிரந்தரக் காரியதரிசி,

கொழும்பு,
1962 ம் ஆண்டு யூன் மீ 20 ந் தேதி.

6–1238

---

## சம்பளச்சபைச் சட்டம்

### அறிவித்தல்

கள்ளு, சாராயம், வின்னாரி உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த காலம்சென்ற திரு கே. ஏ. பிரேமசிங்க, என்பவருக்குப் பதிலாக அங்கம் வகிக்க திரு. சந்திரா வல்கம என்பவரை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச்சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசியமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளசசபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

வி. சா. ம. த மெல்,
தொழில், தேசியமய சேவை மந்திரி காரி யாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஆண்டு யூன் மீ 20 ந் தேதி.

6–1237

---

எல். டி–பீ 50/37

## கூட்டுறவுச் சங்கச் சட்டம்

கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் (124 ம் அதிகாரம்) 57 ம் பிரிவின்கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்றொழில் மந்திரியவர்கள் பிறப்பித்த கட்டளை.

ரி. பி. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூன் மாதம் 19 ந் திகதி.

### கட்டளை

கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் (124 ம் அதிகாரம்) 47 (1) ம் பிரிவின் ஏற்பாடுகளை மட்டுப்படுத்தப்பட்ட, உத்தரவாதமுடைய றெக்வுட் தோட்ட கூட்டுறவு பண்டசாலைச் சங்கம் பின்பற்ற வேண்டும். ஆனால், அப் பிரிவின்கீழ் ஒதுக்கு நிதிக்குக் கொண்டுசெல்லப்படவேண்டிய சுத்த இலாபத்தின் ஆகக் குறைந்த பாகம், நாலிலொன்றாயிராமல், நூற்றுக் குப் பத்து வீதமாயிருத்தல் வேண்டும்.

6–1138

## அறிவித்தல்

1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் பிரிவு 51 உபபிரிவு 3 ன் படி கீழ்வரும் அட்டவணையில் முதலாம் நிரலில் சொல்லப்பட்ட கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர்கள் இரண்டாம் நிரலில் சொல்லப்பட்ட நிர்வாக மாவட்டத்துக்கு மூன்றும் நிரலில் சொல்லப்பட்ட திகதி தொடக்கம் மாற்றப்பட்டுள்ளனரென இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜே. வி. பொன்சேக்கா,
கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூன் மீ 4 ந உ.

### அட்டவணை

| முதலாம் நிரல் | இரண்டாம் நிரல் | மூன்றும் நிரல் |
|---|---|---|
| மலகொடகமகே டயானன்ட அமரசிங்க | கண்டி | 17. 4.61 |
| அசோக சேரசிங்க குணவர்தன | குருநாகல் | 1.12.61 |
| மலகொடகமகே டயானன்ட அமரசிங்க | மாத்தளை | 9. 1.62 |
| அசோக சேரசிங்க குணவர்தன | புத்தளமும் சிலாபமும் | 1. 3.62 |
| காவின் அல்பிரட் மனம்பேரி கருணாரத்தின | அநுராதபுரம் | 1. 3.62 |
| பலிகவடநாகே நீல் மாசெலஸ் பெனுன்டோ | நுவரெலியா | 1. 7.62 |
| ராஜா பேறம் மலிகஸ்பே கோறளே | கேகாலே | 1. 7.62 |
| டிசநாயக்க மொற்றலாலகே ஆரியரத்தின | அம்பாறை | 25. 6.62 |

6—1216/1

## அறிவித்தல்

1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் பிரிவு 51 உபபிரிவு 3 ன் படி கீழ்வரும் அட்டவணையில் முதலாம் நிரலில் சொல்லப்பட்ட கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர்கள் இரண்டாம் நிரலில் சொல்லப்பட்ட நிர்வாக மாவட்டத்துக்கு மூன்றும் நிரலில் சொல்லப்பட்ட திகதி தொடக்கம் மாற்றப்பட்டுள்ளனரென இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜே. வி. பொன்சேக்கா,
கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூன் மீ 4 ந உ.

### அட்டவணை

| முதலாம் நிரல் | இரண்டாம் நிரல் | மூன்றும் நிரல் |
|---|---|---|
| பிரடெறிக் ட பொன்சேக்கா வர்ணசூரிய-குணரத்தின | மாத்தறை | 9.12.59 தொடக்கம் 31. 7. 60 வரை |
| கியூபேற் விக்றர் கிறேசியன் ட சில்வா | கண்டி | 2. 4.62 |

6—1216/2.

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## விளம்பரம்

1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க "தொற்றுநோய்கள்" (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டம் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4 உபபிரிவு (1) ன் விதிகளுக்கமைய 1.6.62 ல் வெளியான 13,145 ம் இலக்க வர்த்தமானியில் வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தீவுப்பிரிவில் அனலைதீவுப் பிரிவில் இருந்ததாகப் பிரகடனப்படுத்தப்பட்ட "தொடை வீக்கம்" என்னும் தொற்றுநோய் அங்கு தற்பொழுது அற்றுவிட்டதென்பதை இந்தாற் பிரகடனப்படுத்துகிறேன்.

இப்பிரகடனம் ஈண்டு பொறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து செயல்முறைக்கு வருகின்றது.

ஆரியதாசா அமரசிங்க,
அரசாங்க பிரதம மிருகவைத்தியர்.

அரச பிரதம மிருகவைத்தியர் களரி,
பேராதனை,
1962 ம் ஆண்டு ஜூன் மீ 19 ந உ.

6—1144.

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணம [illegible] கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு. அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது